சுருக்கம்.

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம் – சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணியாளர்கள், புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்பவர்களுக்கு 10 நாட்களுக்கு மிகாமல் சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்க ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சஉதி2) துறை,

அரசு ஆணை (நிலை) எண். 7

நாள்: 06–01–2010.
திருவள்ளுவர் ஆண்டு 2040
மார்கழி 22ம் நாள்

படிக்கப்பட்டது:-

1. அரசு ஆணை(நிலை) எண். 430, நிதித் (ஊ.பி) துறை. நாள். 10–09–2007.
2. அரசு ஆணை (நிலை) எண். 282/நிதித் (ஊ.பி) துறை, நாள். 30–06–2008.
3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21–11–09 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்புகள்.

-----

ஆணை:-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் அரசு பணியாளர்களுக்கு மருத்துவ காப்பீட்டுத் திட்டம் தொடங்கப்பட்டு சத்துணவுத் திட்டத்தில் வரையறுக்கப்படாத ஊதிய விகிதத்தில் பணியாற்றும் பணியாளர்களும் இத்திட்டத்தில் பயன்பெறுவர் என ஆணையிடப்பட்டது. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் சத்துணவு மற்றும் குழந்தைகள் மையங்களில் பணியாற்றும் சமையலர், சமையல் உதவியாளர், அங்கன்வாடி உதவியாளர்களும் இத்திட்டத்தில் பயனடையும் வகையில் ஆணையிடப்பட்டது.

2. இந்நிலையில் சத்துணவு, குழந்தைகள் மைய பணியாளர்கள் 21–11–09 அன்று நடத்திய நன்றி அறிவிப்பு மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்வருமாறு அறிவிப்பு செய்துள்ளார்கள்:-

> "சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணியாளர்களில், அரசு பணியாளர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்பவர்களுக்கு 10 நாட்களுக்கு மிகாமல் சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்படும்"

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள், புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்பவர்களுக்கு, 10 நாட்களுக்கு மிகாமல் சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்க அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவை அ.சா.கு.எண்.3597/FS/P/09 நாள். 21–12–09 ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா. இராம மோகனராவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

சமூக நல ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர் / ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், சென்னை–113.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை–15.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–5/35/79.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
தலைமை துறை அரசு நிறுவனத் தணிக்கையர், சென்னை–2.

நகல்:–

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (சந)த் துறை / பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத்துறை /
மக்கள் நல்வாழ்வு துறை, சென்னை –9.
சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (அனைத்து பிரிவுகள்) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
7/1/10